# பால் மருக்கள் (Molluscum Contagiosum)

**1. பால் மருக்கள் என்றால் என்ன?**

இது வைரஸால் ஏற்படும் பொதுவாக சமூகத்தில் காணப்படும் மருக்கள் ஆகும். இது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவக்கூடியது. இது பொதுவாக சிறு குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினரையும் தாக்கக்கூடியது. இருந்தும் இது பெரியவர்களையும் பாதிக்கலாம்

**2. இந்த நோய் எவ்வாறு ஏற்படுகிறது?**

பால் மருக்கள் என்பது Pox வைரஸ் குழுவைச் சேர்ந்த வைரஸால் ஏற்படும் ஒரு நோயாகும். இது ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நோயாளியின் தொடுகை அல்லது அவர்களது ஆடைகள், துடைப்பங்கள், படுக்கைகள் மூலம் பரவக்கூடியது.

இது ஒரு மரபணு நோயோ அல்லது பரம்பரை நோயோ அல்ல.

**3. இந்த நோயின் அறிகுறிகள் என்ன?**

இது மிகச்சிறிய 2 - 6 mm அளவிலான பளபளப்பான வெளிறிய மருக்கள் ஆகும். மிகவும் அரிதாக இவை அரிப்பையோ, காயங்களையோ ஏற்படுத்தலாம்.

**4. பால் மருக்களை எவ்வாறு கண்டறிவது?**

தோல் மருத்துவரால் நோயை எளிதில் கண்டறிய முடியும்.

**5. இந்த நோயை குணப்படுத்த முடியுமா?**

இது பொதுவாக நோயெதிர்ப்பு சக்தியால் குணப்படுத்தப்படும் ஒரு நோயாகும். இருப்பினும், மருக்கள் கடுமையாக இருக்கும்போது, சுய-குணப்படுத்துதல் தாமதமாகும்போது, அல்லது அரிப்பு / தொற்று இருந்தால், நோயைக் குணப்படுத்த சிகிச்சையைப் பயன்படுத்தலாம்.

**6. இதற்கான சிகிச்சைகள் என்ன?**

மருக்கள் தானாக உடைந்து / அமர்ந்து போகலாம் அப்போது மருக்களுக்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தி உருவாகி நோய் குணமாகும்.

இது சாத்தியமில்லை என்றால், வேறு சிகிச்சைகள் உள்ளன. அவைகள்,

1. ஒப்பனை சிகிச்சை முறைகள் (உ.தா) TCA (Trichloroacetic acid)
2. Cryo சிகிச்சைகள் (அதிகுளிரான திரவ நைதரசன் வாயு)
3. Electro - Cautery சிகிச்சை முறை

**7. பால் மருக்கள் தொற்று உள்ள நோயாளி பின்பற்ற வேண்டிய சுகாதார நடைமுறைகள் என்ன?**

இது மற்றொரு நபருக்கு பரவாமல் தடுக்க, உங்கள் சொந்த உடைகள்/துடைப்பங்கள் மற்றும் விரிப்புக்களை பயன்படுத்தவும்.

“பாடசாலை செல்லாமல் இருப்பதற்கு மருக்கள் இருப்பது ஒரு காரணமல்ல”